## ‘நான் முதல்வன்’ திட்டத்தின் கீழ் – தமிழ்நாட்டைச் சேர்ந்த கணினி அறிவியல் துறை மாணவர்களுக்கான கேம் டெவலப்பர் – ஆர்டிஸ்ட் – புரோகிராம் திறன் பயிற்சித் திட்டம்!

# கூகுள் - யுனிட்டி நிறுவனம் - தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் இடையே ஒப்பந்தம்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில் கையொப்பம்!

**சென்னை, ஜூலை 30-**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் ‘நான் முதல்வன்’ திட்டத்தின் கீழ் தமிழ் நாட்டைச் சேர்ந்த கணினி அறிவியல் துறையிலுள்ள இறுதி ஆண்டு பயிலும் பொறியியல் கல்லூரி மாணவர்களுக் கான கேம் டெவலப்பர், ஆர்டிஸ்ட் மற் றும் புரோகிராமர் திறன் பயிற்சி திட் டத்திற்காக உலகளாவிய நிறுவன மான கூகுள் மற்றும் யுனிட்டி நிறுவ னத்தினருக்கும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்திற்கும் இடையே ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.**



அதன் விவரம் வருமாறு:-

2022-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1-ஆம் தேதியன்று தமிழ்நாடு முதல மைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட நான் முதல்வன் திட்டம், தமிழ்நாட்டில் உயர்கல்வியில் புரட்சியை ஏற்படுத் தும் ஒரு மாபெரும் முயற்சியாகும்.

இத்திட்டமானது ஆண்டுதோறும் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்க ளைத் திறன் சார்ந்த பயிற்சிகள் மூலம் தொழில்துறைக்கு தயாரான திறன்மிகு சமுதாயத்தை உருவாக்கும் இலட்சிய நோக்கத்துடன் தொடங்கப்பட்டது. முத லாம் ஆண்டிலேயே 13 லட்சம் மாண வர்களுக்கு திறன் பயிற்சி அளித்து, தற்போது வரை சுமார் 41 லட்சம் திறன் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. திட்டம் துவங்கப்பட்டதிலிருந்து தற் போது வரை கல்லூரி பேராசிரியர்க ளுக்கு ஒரு லட்சம் திறன் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் பொறியியல், கலை மற் றும் அறிவியல், பாலிடெக்னிக் மற்றும் ITI மாணவர்களுக்கு எவ்வித நிதிச் சுமையும் இன்றி கல்வியாளர்கள், தொழில்நுட்ப நிபுணர்கள், வழிகாட்டி கள் மற்றும் நிர்வாகிகள் மூலம் திறன் களை வளர்க்கும் வகையில் ஒருங்கி ணைந்த கல்வி வாய்ப்புகளை வழங்குகிறது.

இந்தத் திட்டம் நகர்ப்புற மாணவர்க ளின் திறன்களுக்கு இணையாக ஊர கப்பகுதியைச் சேர்ந்த மாணவர்களின் திறன்களை எவ்வித செலவுமின்றி உயர்த்துவதற்கு, Microsoft, IBM, ORACLE, GOOGLE, CISCO, HCL, Infosys, AWS, Siemens, FANUC, Dassault, L&T போன்ற உலகளாவிய நிறுவனங்களுடன் இணைந்து தொழில்துறை சார்ந்த திறன் பயிற்சி களை வழங்குகிறது. இந்தப் பயிற்சிகள் Big Data, Internet of Things, Robotics, Artificial Intelligence, Machine Learning, Industry 4.0, Robotics, Building Information Modelling போன்ற துறைகளில் தொழில்நுட்ப நிபு ணர்களால் வழங்கப்படுகின்றன.

திறன் வகுப்புகளை மாணவர்கள் எளிதிலும் இலவசமாகவும் பெற ஏற்ற வாறு பிரத்யேகமாக இணையதளம் ஒன்று (www.naanmudhalvan.tn.gov.in) இயக்கப்படுகிறது.

கடந்த 3 ஆண்டுகளில் வேலை வாய்ப்பு பெறுவதற்கு விருப்பம் தெரி வித்த 3,28,393 இறுதி ஆண்டு கல் லூரி மாணவர்கள் கல்லூரி வளாக வேலைவாய்ப்பு முகாம்கள் மற்றும் நான் முதல்வன் மாவட்ட வேலை வாய்ப்பு முகாம்கள் மூலம் பணி நியம னம் பெற்றுள்ளனர்

**‘நான் முதல்வன்’**
**நிரல் திருவிழா:**

இளைஞர்களின் படைப்பாற்றல் மற் றும் புதுமை திறனை வளர்க்கும் நோக் குடன் உருவாக்கப்பட்டது. இந்தத் திட் டத்தின் மூலம் அரசுத் துறைகள் மற்றும் தொழில் நிறுவனங்களிட மி ருந்து பெறப்பட்ட நுட்பவியல் சவால் கள் (problem statements) இறுதி ஆண் டுப் பொறியியல் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. முதலாவது பதிப்பில் 8,486 குழுக்களும், இரண்டாவது பதிப்பில் 15,337 குழுக்களும் பங்கேற் றன. சிறந்த ஆயிரம் படைப்புகளுக்கு பத்தாயிரம் ரூபாய் ஊக்கத்தொகை யாக வழங்கப்படுகிறது.

நான் முதல்வனின் SCOUT திட்டமா னது, தமிழகத்தில் உள்ள மாணவர்க ளுக்கு உலகளாவிய தொழில்முறை பயிற்சியினை வெளிநாடுகளில் உள்ள முன்னணி நிறுவனங்கள் மற்றும் பல் கலைக்கழகங்களுடன் இணைந்து வழங்கும் திட்டம் ஆகும். Data Science, AI, Bio Technology போன்ற துறைக ளில் மாணவர்களை உலகத் தரம் கொண்ட வல்லுநர்களாக மேம்படுத்த இந்தத் திட்டம் உதவுகிறது.

இத்திட்டத்தின் முதல் படியாக பிரிட் டிஷ் கவுன்சில் மற்றும் தா்ஹம் பல்க லைக்கழகத்துடன் இணைந்து 100 மாணவர்களுக்கு இணையதளம் மூலமாக AI மற்றும் Data Science துறையில் பயிற்சி வழங்கப்பட்டது. இவர்களில் சிறந்த 25 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு தர் ஹம் பல்கலைக்கழகத்தில் நேரடி பயிற்சி வழங்கப்பட்டது.

இப்பயிற்சி பெற்ற 25 மாணவர்க ளில், 13 மாணவர்கள் முன்னணி நிறு வனங்களான பேங்க் ஆப் நியூயார்க், சிட்டிகார்ப், Zoho, HCL டெக் போன்ற பெருநிறுவனங்களில் பணி நியமனம் பெற்றுள்ளனர். இவர்கள் ஆண்டு வரு மானமாக சுமார் 10 லட்சம் முதல் 31 லட்சம் வரை பெறுகின்றனர். இதர 12 மாணவர்கள் உயர்கல்வியை தொடர கின்றனர்.

இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டைச் சார்ந்த 10 மாணவிகள் ஜப்பான் நாட் டில் Internship பயிற்சி மேற்கொண்ட னர். இவர்களுள், 6 மாணவிகள் நெக்ஸ்ட் ஜென் கார்ப் என்ற நிறுவனத் தில் கணினி துறையில் தொழில் பயிற்சி பெற்று, 5 மாணவிகள் அதே நிறுவனத்தில் முழு நேர பணி நியம னம் பெற்று ஆண்டு வருமானமாக சுமார் 21 லட்சம் பெறுகின்றனர்.

மேலும், 4 மாணவிகள் ஜப்பானில் உள்ள கியோட்டோ பல்கலைக்கழகத் தில் Bio Technology சார்ந்த ஆராய்ச்சி பயிற்சி பெற்றனர். இவர்கள் அனைவ ரும் ஆராய்ச்சி சார்ந்த பயிற்சியினை தொடர இந்தியாவில் உள்ள ஐஐடி ரூர்க் கியில் வாய்ப்பு கிடைத்துள்ளது. இந்த 4 மாணவிகளும் கியோட்டோ பல்க லைக்கழகத்தில் முதுகலை பட்டப் படிப்பு படிப்பதற்கான வாய்ப்பையும் பெற்றுள்ளனர் என்பது மேலும் சிறப்பு.

இதன் தொடர்ச்சியாக 2025-ஆம் ஆண்டில் 6 மாணவர்கள் தென்கொ ரியா நாட்டில் உள்ள Pusan Universityயிலும் Gachon University யிலும் Internship பயிற்சியினை நிறைவு செய்தனர். இதில், Gachon University இல் Internship முடித்த 3 மாணவர்களுக்கு உயர்கல்வி பயில Gachon University வாய்ப்பளித் துள்ளது.

மேலும் தமிழ்நாட்டு மாணவர்க ளுக்கான வேலைவாய்ப்பினை அதிக ரிக்கும் வகையில் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்காக Google Play மற் றும் Unity Game Developer Training program என்ற புதிய முன்னெடுப்பு எடுக்கப்பட்டுள்ளது.

Google Play மற்றும் Unity Game Developer Training Program என்பது Google Play, Unity மற்றும் முன்னணி கேம் துறையினர் இணைந்து வழங் கும் ஒரு சிறப்பு திறன் பயிற்சி ஆகும். இது கேம் டிசைன், டெவலப்மெண்ட் மற் றும் மானிட்டைசேஷன் ஆகியவற்றில் உலகத் தரத்திலான தொழில்நுட்ப திறன்களை வழங்குவதைக் குறிக்கோ ளாகக் கொண்டுள்ளது. குறிப்பாக தமிழ்நாட்டைச் சேர்ந்த கணினி அறி வியல் துறையிலுள்ள (CSE) இறுதி யாண்டு இன்ஜினியரிங் மாணவர்க ளுக்கும் மற்றும் நடப்பாண்டில் உயர்கல்வி முடித்த மாணவர்களுக் கும் இது சிறந்த வாய்ப்பாகும்.


இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்: இலவச Unity லைசென்ஸ், இலவச பயிற்சி, தேர்வு தயாரிப்பு அமர்வுகள், தொழில் நிபுணர்களுடன் சந்திப்பு மற் றும் உரையாடல் வாய்ப்பு, மற்றும் ஸ்டார்ட்அப் ஆர்வமுள்ளவர்களுக்கு இன்க்யூபெட்டர் மற்றும் முதலீடு களுக் கான வாய்ப்பு ஆகியவை அடங்கும். முதற்கட்டமாக தேர்ந்தெடுக்கப்பட்ட 250 மாணவர்களுக்கு இந்த திறன் பயிற்சி வழங்கப்படவுள்ளது,

ஒவ்வொரு மாணவருக்கும் தலா 32,000 ரூபாய் (அமெரிக்க டாலர் 378) மதிப்புடைய Unity லைசென்ஸ் மூலம் இந்த பயிற்சி மற்றும் சான்றிதழ் வழங்கப்படவுள்ளது. இதன் மொத்த மதிப்பு 80,32,500 ரூபாய் (எண்பது லட்சத்து முப்பத்திரண்டு ஆயிரத்து ஐநூறு ரூபாய்) ஆகும்.

உலகளாவிய gaming இண்டஸ்ட்ரி யின் தற்போதைய சந்தை மதிப்பு 200 பில்லியன் டாலர் ஆகும், 2029க்குள் இந்தியாவின் gaming இண்டஸ்ட்ரி யின் சந்தை மதிப்பு 9 பில்லியன் டால ராக உருவெடுக்கும் என எதிர்பார்க்கப் படு கிறது.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (29.7.2025) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ‘நான் முதல்வன்’ திட்டத்தின் கீழ் தமிழ் நாட்டைச் சேர்ந்த கணினி அறிவியல் துறையிலுள்ள இறுதி ஆண்டு பயிலும் பொறியியல் கல்லூரி மாணவர்களுக் கான கேம் டெவலப்பர், ஆர்டிஸ்ட் மற் றும் புரோகிராமர் திறன் பயிற்சித் திட்டத் திற்காக உலகளாவிய நிறுவனமான கூகுள் மற்றும் யுனிட்டி நிறுவனத்தின ருக்கும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்திற்கும் இடையே ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்வில் கூகிள் பிளே பார்ட் னெர்ஷிப்ஸ், APAC பார்ட்னர் மேனேஜ் மெண்ட் & ஈகோஸிஸ்டெம் பார்ட்னர் ஷிப்ஸ் டைரக்டர் குணால்சோனி, கூகுள் இந்தியா பிளாட்பார்ம்ஸ் & டிவைஸ், அரசாங்க விவகாரங்கள் மற் றும் பொதுக் கொள்கை, பாலிசி ஹெட் திருமதி அதிதி சதுர்வேதி, சிறப்புத்திட்ட செயலாக்கத்துறையின் கூடுதல் தலைமை செயலாளர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத் தின் மேலாண்மை இயக்குனர் கிராந்தி குமார் பாடி ஆகியோர் உடனிருந்தனர்.




சென்னை, கோட்டூர்புரத்தில் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நேற்று (29.07.2025) உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அலுவலர்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர்கள்/ மண்டல மேலாளர்கள், தரக்கட் தரக்கட்டுப்பாட்டு அலுவலர்கள், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவன அலுவலர்கள், கூட்டுறவுத் துறை பொது விநியோக பதிவாளர்கள், குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் குற்றப் புலனாய்வுத் துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைந்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் அ. ஜான் லூயிஸ், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர் சு. சிவராசு, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் டாக்டர்.ஜெ.விஜயாராணி, கூட்டுறவுத் துறை கூடுதல் பதிவாளர் சா.ப.அம்ரித், குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை காவல்துறை தலைவர் ரூபேஷ் குமார் மீனா, மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட 164வது வார்டு பழவந்தாங்கல் பகுதியில் நடைபெற்ற ”உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டு, உடனடி தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கு சான்றிதழ்களை பயனாளிகளுக்கு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். அருகில் மண்டலக்குழு தலைவர் என்.சந்திரன், வட்டச் செயலாளர் ஏசுதாஸ், மாமன்ற உறுப்பினர் தேவி ஏசுதாஸ் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.